OS.No.:8/2024

நாள் : 15.10.2024

வா.சா. : 1

பெயர் : இந்துராணி

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2 ம் பிரதிவாதி பிரகாஷ் 3 ம் பிரதிவாதி கோபாலக்கிருஷ்ணன், எனது மகன்கள் என்றாலும் 3 ம் பிரதிவாதி சித்ரா எனது மகள் என்றால் சரி. தாவா சொத்துகள் குடும்ப பூர்வீக சொத்துக்கள் என்றால் சரி. சிதம்பரம், சீர்காழியில் உள்ள சொத்துகள் குடும்ப பூர்வீக சொத்தை அபிவிருத்தி செய்து அதிலிருந்து வந்த வருமானத்திலிருந்து கிரயம் பெறப்பட்ட சொத்துகள் என்றால் சரி. என் மூத்த மகன் பெயர் ஜெயக்குமார் (1ம் பிரதிவாதி) என்றாலும் அவர் இறந்துவிட்டார் என்றால் சரி. அவருடைய வாரிசுகள் தான் 7 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சரி. தாவா சொத்துக்களில் தாவா 1 முதல் 4 வது ஐட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதி மற்றும் 7 வது பிரதிவாதி பெயரில் உள்ளது என்றாலும் அந்த சொத்துகள் குடும்ப பூர்வீக சொத்தை அபிவிருத்தி செய்தும் 1வது ஐட்ட சொத்திலிருந்து வந்த வருமானத்திலிருந்து 1ம் பிரதிவாதி மற்றும் 7 ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்ட சொத்துகள் என்றால் சரி. அந்த சொத்துக்களை ஜெயக்குமார் தான் மேற்படி பூர்வீக சொத்திலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து தன் பெயரிலும் தனது மனைவி பெயரிலும் கிரயம் வாங்கினார். அதனால் அந்த சொத்துக்களில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாகம் உண்டு என்றால் சரி.

**7 முதல் 9 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எவ்வளவு ஐட்ட சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 சொத்துக்கு வழக்கு போட்டுள்ளேன். கச்சேரி ரோட்டில் உள்ள சொத்து, மணக்குடியில் உள்ள வீடு, வெள்ளாந்தெருவில் உள்ள வீடு ஆகிய சொத்துகளுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கச்சேரி ரோட்டில் உள்ள சொத்து, பூர்வீக சொத்து. கச்சேரி ரோட்டில் உள்ள சொத்து, யாரிடமிருந்தாவது கிரயம் பெறப்பட்ட சொத்தா என்றால் இல்லை அது பூர்வீக சொத்து. அந்த சொத்து

1440 சதுரடி விஸ்தீரணம் உள்ள சொத்து என்றால் சரி. அந்த சொத்தில் 2 வீடு மற்றும் 13 கடைகள் உள்ளது. அந்த சொத்து என் மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து. அந்த சொத்திற்கான பத்திரம் உள்ளதா என்றால் தெரியவில்லை என் கொழுந்தனாரிடம் கேட்க வேண்டும். என் மாமனாருக்கு 4 மகன்கள் 4 மகள்கள். அந்த 8 பேருக்குள் ஏதேனும் பாகம் ஏற்பட்டதா அல்லது பத்திரம் எதுவும் உள்ளதா என்றால் பாகப்பிரிவனை ஏற்பட்டது அதற்கு பத்திரம் உள்ளதா என்றால் கேட்கவேண்டும். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான விவரம் யார் சொன்னார்கள் என்றால் என் கொழுந்தனார் கரியமூர்த்தி சொன்னார். தாவா 1ம் ஐட்ட சொத்து தர்மபுரம் ஆதினம் பெரிய கோவிலுக்கு சொந்தமான சொத்து. கோவில் சொத்தை பாகம் பிரிக்க முடியாது என்றாலும் அந்த சொத்து குத்தகை சொத்து என்பதால் பாகப்பிரிவினைக்கு உட்படுத்த முடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் ஐட்ட சொத்தில் யார் தொழில் செய்து வந்தார் என்றால் என் மகன் ஜெயக்குமார் கல்லுப்பட்டறை வைத்திருந்தார். அந்த தொழிலை அபிவிருத்தி செய்து பீங்கான் டைல்ஸ் கடை வைத்திருந்தார் என்றால் சரி. ஆரம்பத்தில் தாவா 1ம் ஐட்ட சொத்தில் கீத்து கொட்டகை இருந்தது என்றால் சரி. மயிலாடுதுறையில் ஜெயக்குமார் கல்லுப்பட்டறைக்கு நல்ல பெயர் என்றால் சரி. நல்ல பெயருடன் வசதியுடன் என் மகன் 1ம் பிரதிவாதி வாழ்ந்து வந்தார் என்றால் சரி. அவருடைய உழைப்பில் தான் 1ம் ஐட்ட சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டது என்றால் அவரது சம்பாத்தியம் மற்றும் கொற்கை கிராமத்தில் இருந்த சொத்தை விற்றுதான் கட்டிடம் கட்டப்பட்டது. கொற்கை கிராமத்தில் இருந்த சொத்தை விற்றுதான் கட்டிடம் கட்டப்பட்டது என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஜெயக்குமார் தான் கட்டிடங்களை கட்டி வாடகைகளை அவரே வசூல் செய்து வந்தார் என்றால் சரி. 1ம் ஐட்ட சொத்தின் கீழ் நிலம் கோவிக்கு சொந்தம் என்றாலும் அதன் மேல் உள்ள கட்டிடம் ஜெயக்குமாரால் கட்டப்பட்டது என்றாலும் அதில் எங்களுக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் ஐட்ட சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டதற்கான வரவு செலவு கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. அந்த

விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2ம் ஐட்ட சொத்தான வெள்ளாந்தெரு வீடு எந்த வருடம் எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்றால் தெரியாது. சூழ்ச்சியாக செய்துவிட்டார்கள். எனது மகன்கள் ஜெயப்பிரகாஷ் மற்றும் கோபாலக்கிருஷ்ணனும் வெளிநாடு சென்று சம்பாதித்த பணத்தை என்னிடம் தான் கொடுத்தார்கள். அந்த பணத்தை நான் ஜெயக்குமார் கேட்டதால் கொடுத்தேன். அதை வைத்து 2ம் ஐட்ட சொத்தை வாங்கியிருக்கிறார். ஜெயப்பிரகாஷ் மற்றும் கோபாலக்கிருஷ்ணன் வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பியதற்கான ஆதாரம் இருக்கிறதா அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருப்பேன். 2ம் ஐட்ட சொத்து யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி மனைவியான 7ம் பிரதிவாதி ராஜேஸ்வரி பெயரில் வாங்கப்பட்டுள்ளது. தாவா 3ம் ஐட்ட சொத்து யார் பெயரில் எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் தெரியவில்லை. அதற்கான பத்திரம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 2, 3 ஐட்ட சொத்துக்கள் எனக்கோ எனது கணவருக்கோ பாத்தியப்பட்ட சொத்தக்கள் இல்லை என்றாலும் அவை 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டவை என்றாலும் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் ஐட்ட சொத்தில் கட்டிடம் உள்ளது. கட்டிடத்துடன் தான் வாங்கப்பட்டது. அதை வாடகைக்கு ஜெயக்குமார் விட்டிருந்தார். அந்த வாடகையை ஜெயக்குமார் வாங்கினார். தற்போது அவர் மனைவி வாங்குகிறார். 3ம் ஐட்ட சொத்து வாங்கப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. 4ம் ஐட்ட சொத்திற்கான பத்திரத்தை பார்த்திருக்கிறேனா என்றால் இருக்கும் கோர்ட்டில் போடவில்லை என்றால் சரி. அந்த இடம் 5 வருடத்திற்கு முன்பு கிரயம் வாங்கப்பட்டது. அது பற்றி என்னிடம் சொல்லவில்லை. அதனால் அந்த சொத்து யாரிடமிருந்து எந்த வருடம் எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. அது விவசாய நிலம் அது தெரியுமா என்றால் தெரியாது. அது சுந்தரேஸ்வர சாமி கோவிலுக்கு சொந்தமானது என்று தெரியுமா என்றால் தெரியாது . திருக்கடையூரில் ஜெயக்குமார் சொத்து வாங்கியுள்ளார். அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அதற்கான பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 5ம் ஐட்ட சொத்து

அமிர்தகடேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான சொத்து என்றால் சரி. மேற்படி 4 மற்றும் 5 ஐட்ட சொத்துக்கள் ஜெயக்குமாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றாலும் அதில் அவரது சகோதர சகோதரிகளுக்கோ எனக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா 6ம் ஐட்ட சொத்துதற்போது உள்ளதா அல்லது விற்பனை செய்யப்பட்டுவிட்டதா என்றால் தெரியாது. அது எந்த வருடம் யாரால் எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் பெறப்பட்டது என்று தெரியாது என்றால் தெரியாது. நான் பத்திரத்தை பார்க்கவில்லை என்பதாலும் சொத்து வாங்கியது தெரியாது என்பதாலும் சொத்தின் சர்வே நம்பர் அதன் நான்கெல்லை விபரம் விஸ்தீரணம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது மகன்கள் விசாரித்திருப்பார்கள். அதனால் தெரியும். எங்கள் குடும்பத்தில் 1ம் பிரதிவாதி அவரது மனைவி மகளை தவிர மற்ற அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்றால் சரி. சாட்சிமீண்டும் இப்போது ஒற்றுமையாக இல்லை என்றும் அதற்கு முன்பு ஒற்றுமையாக இருந்தோம் என்று சொல்கிறார். என்னை கோர்டுக்கு எனது மகன் கோபாலக்கிருஷ்ணன் என் கொழுந்தனார் எனது மகள் ஆகியோர் அழைத்து வந்தார்கள் என்றால் என் மகன் கோபாலக்கிருஷ்ணன் அழைத்துவந்தார் என் மகள் வந்துவிட்டு போய்விட்டார். தாவா 7ம் ஐட்ட சொத்தை ஜெயக்குமார் 2ம் பிரதிவாதி பெயரில் வாங்கி வைத்தார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியே சம்பாதித்து வாங்கினார். அவரது மாமனார் வீடு வசதியான வீடு அவர்கள் நகை பணமெல்லாம் கொடுத்து உதவி செய்தார்கள். 1ம் ஐட்ட சொத்து குறித்து 2ம் பிரதிவாதி பிரகாஷ் கூடுதல் சார்பு நீதிமன்றம் மயிலாடுதுறையில் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு 72/2012 என்ற வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரி. எல்லோரும் பேசி ஜெயக்குமார் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது எ்னறால் சரி. அதன்படி 2000 ரூபாய் கொடுத்தான் அதன்பிறகு கொடுக்கவில்லை அதனால் எனக்கு வருத்தம் என்றால் கிடையாது. இது சம்பந்தமாக போலிசில் புகார் கொடுத்தேன் என்றால் சரி. கச்சேரி ரோட்டில் ஜெயக்குமார் நடத்தி வந்த கடையை என் கொழுந்தனார் என் மகன்கள் எல்லோரும் உடைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்து

ஜெயக்குமாருடைய சொத்துக்கள் என்றாலும் சொத்தை அபகரிப்பதற்கான அனைவரும் சேர்ந்து ஜெயக்குமாருக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் அதில் எங்களுக்கு பாகம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.